1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பேரம்பாக்கம் ஊராட்சிக்கு மேல்நிலைத் தொட்டி அமைக்கத் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஏற்கனவே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருவதால் மணவாள நகர் ஊராட்சிக்கு மேல் நிலைத் தொட்டி புதிதாக அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) ஆழ்துளை கிணறு வேலை முடிந்து அதனுடைய கொடுதிறன் அறிந்து மதிப்பீடு தயாரித்து பேரம்பாக்கம் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆழ்துளை கிணறு பணி நடை பெற்று வருகின்றது.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அது எப்போது ஆரம்பிக்கப்படும்? அதன் மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, முடியும் தருவாயில் இருக்கிறது

கம்போஸ்ட் உர விற்பனை

*வினா எண். 37—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல நகரசபைகளில் கம்போஸ்ட் உரம் விற்பனையாகாமல் தேங்கிக் கிடைக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அவற்றை உடனடியாக விற்பதற்கு அரசின் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டு கம்போஸ்ட் எரு விற்பனை குறைந்துள்ளது.

(ஆ) கம்போஸ்ட் உரத்தினை விற்பதற்கு 10 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு உரத்தினை வேகமாக விற்பனை செய்ய அறிவுரை வழங்கியும் உரத்தின் தரத்தினை உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டும் தேவையானதால் மொத்தமாக பொது ஏலத்தில் விடவும் தக்க அறிவுரைகள் நகராட்சி, நிர்வாக இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த கம்போஸ்ட் உரம் அதிக விலைக்கு விற்கப்படுவதால் வாங்க முடியவில்லை என்று விவசாயிகள் குறை கூறுகிறார்கள். ஆகவே விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1982 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதற்காகத்தான் பொது ஏலத்திலே விடுகிறார்கள். பொது ஏலம் வரும்போது எவ்வளவு குறைந்த விலைக்கு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னையில் உற்பத்தியாகக்கூடிய கழிவு மொத்தம் எவ்வளவு? அந்தக் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு அரசு என்னென்ன செயற்குறிப்புகளை வைத்திருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சென்னையிலே ஒரு நாளைக்கு 1,500 டன் கழிவு உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கின்றது. அவற்றை உரமாக மாற்றுவதற்கு தற்போது சைதாப்பேட்டை பகுதியில் ஒரு திட்டத்தை அமல் படுத்திக்கொண்டிருக்கிறோம். கம்போஸ்ட் ப்ளான்ட் என்ற வகையிலே ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கம்போஸ்ட் உரம் நகராட்சிகளில் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பதற்குக் காரணம் அதை வாங்கவேண்டிய விவசாயிகள் அந்தத் தொலைவில் இருந்து வரவேண்டி இருக்கின்றது. ஆகவே பெரிய நகராட்சிகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் 20 மைல் சுற்றளவுக்காவது 5, 6 இடங்களில் கம்போஸ்ட் உர டெப்போக்களை அமைத்தால் விவசாயிகள் சுலபமாகப் பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும். இந்த யோசனையை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துகொண்டோர் எண்ணிக்கை

*வினா எண். 38—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் வேலை கேட்டு பெயர்களைப் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இதுவரை எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது;